

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு,தி.மு.க. தலைமைக் கழகம், அண்ணா அறிவாலயம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட காட்சி.



தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, முரசொலி அலுவலகம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட காட்சி.

மாவட்ட அமைப்பாளர் நடுக்குத்தகை கே.சுரேஷ் குமார் ஏற்பாட்டில்

# திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி சார்பில் சமத்துவ பொங்கல் விழா!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

*திருவள்ளூர் ஜன 15;*

திருவள்ளூர் மத்திய மாவட்டம் இளைஞரணி திமுக சார்பில் ஆவடி தொகுதி நடுக்குத்தகை ஊராட்சியில் சமத்துவ பொங்கல் விழா மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ், மாவட்ட அவைத்தலைவர் ம. ராஜி, ஒன்றிய கழகச் செயலாளர் டி.தேசிங்கு ஆகியோர் வரவேற்புரையாற்றினார்கள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை ஜிசிசி. கருணாநிதி, வி.ஜெ.உமாமகேஸ்வரன், டி.பிரியா குமார், எஸ். சதீஷ்குமார் , ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சாமு.நாசர் தலைமை தாங்கி சமத்துவ பொங்கல் தொடங்கி வைத்து அனைவருக்கும் 500மேற்பட்ட பொதுமக்களுக்கு பொங்கல் பரிசு மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் இதனை தொடர்ந்து நடைபெற்ற உறியடி விளையாட்டில் பங்கேற்று உறியடித்தார்

இந்நிகழ்ச்சி முன்னதாக நடுகுத்தகை வசந்தன் நகரில் ஆவடி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதில் இருந்து 30 லட்சம் ரூபாய் புதிதாக கட்டப்பட்டுள்ள பொழுதுபோக்கு பூங்காவை அமைச்சர் நாசர் திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார் இந்நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளர் நிவேதா ஜெசிகா மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஜெயபாலன் பொதுக்குழு உறுப்பினர் ஜி.விமல் வர்ஷன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் யமுனா ரமேஷ் முன்னாள் தலைவர் என்.லட்சுமி, வி.தியாகராஜ், கு.தமிழ்செல்வி, உதயா, ஒன்றிய நிர்வாகிகள் கட்டதொட்டி குணாசேகர், ஜெ.சாக்ரடீஸ், ஜி.பிரவீன் குமார், ரமேஷ் பக்தாச்சலம், இ.என்.சந்திரன், ராதா, பட்டுபாலா, டி.சஞ்சய், டி.மணிவண்ணன், எம்.உதயா, ஹரி, சிபி சக்கரவர்த்தி கார்த்திக், தியாகுச்சந்தர், பட்டாணி கார்த்திக், ரோஷன், ஆதேஷ், மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

நொளம்பூர் வே.ராஜன் எம்,சி - ரமணி மாதவன் எம்,சி, பங்கேற்பு!

# மதுரவாயல் 147 வது வட்டத்தில் பொங்கல் விழா - மாபெரும் கிரிக்கெட் போட்டி!

## காரம்பாக்கம் க,கணபதி எம்,எல்,ஏ, பரிசு வழங்கல்!

## லயன் எஸ்,ஜி,மாதவன் அறிக்கை!

*சென்னை, ஜன. 15*

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்ட தி.மு.க. சார்பில் திராவிட பொங்கல் விழா முன்னிட்டு 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தலைமையில் எம்.ரவிக்குமார், மதுரவாயல் வடக்கு பகுதி அயலக அணி துணை அமைப்பாளர் ஆர். ஜெயக்குமார், எம்.பிரபாகரன் ஆகியோர் ஏற்பாட்டில் ஆலப்பாக்கம், தந்தை பெரியார் விளையாட்டு திடலில் நாளை (16.01.2026 வெள்ளிக்கிழமை) காலை 8 மணிக்கு, கிரிக்கெட் போட்டி நடைபெற உள்ளது.

அன்று மாலை 5 மணிக்கு, போட்டியில் வெற்றி அணிக்கு மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்குகிறார்.

இதில் வளசரவாக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர், வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், சென்னை மாநகராட்சி கல்வி நிலைக் குழு உறுப்பினர் ரமணி மாதவன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

ஆகவே வட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் கேட்டுக்கொள்கிறார்.



வாய்மையே வெல்லும்


தீண்டாமையை ஒழிக்கவும் – சமூக விடுதலைக்காகவும் நாட்டுக்காகவும்,
ஒடுக்கப்பட்டோரின் முன்னேற்றத்திற்காகவும் உழைத்த
தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களைப் போற்றுவோம் !

-மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்




சுதந்திரப் போராட்ட வீரர்
தியாகி வே. இமானுவேல் சேகரனார்
அவர்களின்
திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம்

திறப்பு விழா

தலைமை

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

இவ்விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் பங்கேற்கிறார்கள்.

நாள் : 17.1.2026, சனிக்கிழமை, நேரம் : நண்பகல் 12.00 மணி,
இடம் : பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்

செ.ம.தொ.இ./58/வரைகலை/2026




அனைவரும் வருக !

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in
வெளியீடு : இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009